# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No. 192/2021

சாட்சி : PW-2
பெயர் : திரு. பெருமாள் செட்டி தேதி : 23.06.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:- ( பிரதிவாதிகள் தரப்பில்)

வாதி வாங்கிய சொத்தின் மீது தான் இவ்வழக்கு நடைபெறுகிறதா என்றால் ஆமாம். அவர் கிரயம் பெற்ற ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் ஆமாம். வாதி அந்த சொத்தை வாடகைக்கு விட்டுள்ளார். யாருக்கு வாடகைக்கு விட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியும், வாதியும் வியாபாரம் எதுவும் சேர்ந்து செய்யவில்லை. 1ம் பிரதிவாதி வாதியின் கடையில் வேலைக்கு இருந்தார். 1ம் பிரதிவாதிக்கு சம்பளம் கொடுக்கப்பட்டதா என்பதை பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு என்ன சொத்துகள் உள்ளது என்பது எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தொழில் தொடங்க போவதாக சொன்னார். என்ன தொழில் என்பது எனக்கு தெரியாது. அவரது தொழிலுக்கு கையில் பணம் வைத்திருந்தாரா அல்லது அவருக்கு எவ்வளவு பணம் தேவை என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் சொத்துகள் வாங்கி விற்பனை செய்யவில்லை. ஒரு ஆவணத்தின் முதல்தாளை மட்டும் வைத்து கொண்டு கிரயமோ, அடமானமோ, கடன் பெறவோ முடியாது என்றால் சரிதான். வாதி இன்று வரை வழக்கு சொத்திற்கு வரி செலுத்தி வருகிறார் என்பதற்கும், வாடகை வசூலித்து வருகிறார் என்பதற்கும் நான் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 13.03.2019 அன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் எந்தவொரு ஆவணத்திலும் சாட்சி

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.23 18:35:53 +0530

I Additional District Judge,
Salem.

கையொப்பம் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி வாதியின் மீது காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என்ன புகார் கொடுத்தார் என்பதை நான் படித்து பார்க்கவில்லை. காவல்துறையினர் விசாரணை செய்தபோது நானும் சென்றேன். மேற்படி புகாரின் பேரில் என்ன முடிவு செய்யப்பட்டது என்பதை வாதி தான் எனக்கு சொன்னார். 1ம் பிரதிவாதி வாதி மீது தாக்கல் செய்துள்ள காசோலை மோசடி வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.  பிரதிவாதிகளுக்கு வாதி எழுதி கொடுத்த ஆவணத்தை நான் நேரில் பார்க்கவில்லை. எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தரப்பினர் அ ல்ல என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரத்தை நீதிமன்றம் வழங்கவேண்டும் என்று எனது முதல்விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனவே நான் வாதியால் ஏற்பாடு செய்த சாட்சி என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.23 18:35:59 +0530

I Additional District Judge,
Salem.